## மெதகம பிரதேச சபை
## மொனராகலை மாவட்டம்

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெதகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 37,305 தொகையான நிலுவை சம்பளம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 223,726,650 தொகையான 02 சொத்து விடயங்களுக்கான உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 74 காணி மற்றும் கட்டிடங்களின் ஆவணங்கள் மற்றும் மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன காணப்படாதிருந்ததுடன் 37 காணிகளை கையேற்பதற்கு பிரதேச செயலகத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி சொத்துக்களின் உரித்தை |

உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணிசமான தொகையொன்றை செலவிடுவதற்கு இயலாதிருந்நமையால் எதிர்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டைச் செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது என அறியத்தருகின்றோம்.

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| 24(1)(அ) ஆம் பிரிவு | 2008 ஆம் ஆண்டு முதல் வீதிப் பதிவேடு நாளது வரையாக்கப்படாதிருந்தது டன் இனங்காணப்பட்ட 116 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. | வீதிப் பதிவேட்டை நாளது வரையாக்கி வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி ஏற்பாட்டைச் செய்து எதிர்காலத்தில் வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதுடன் பதிவேடும் நாளது வரையாக்கப்படுமென அறியத்தருகின்றோம். |
| (ஆ) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட 44 கட்டிட திட்டங்களுக்கு உரிய தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்து வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015, 2016 ஆம் ஆண்டுகளில் கட்டிடத் திட்டங்களுக்காக உரிய நபர்களுக்கு அறிவித்து அதில் 7 நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுட ன் ஏனைய நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை யால் தரச் சான்றுதழ் விநியோகிக்க முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,240,890 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,915,221 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,175,538 | 930,849 | 637,007 | 293,842 | 215,538 | 215,538 | 128,328 | 87,210 |
| (ii) | வாடகை | 18,226,645 | 17,656,328 | 17,136,148 | 520,180 | 600,000 | 556,120 | 556,120 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 635,300 | 586,397 | 546,684 | 39,713 | 400,000 | 349,700 | 349,700 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 20,594,300 | 6,489,464 | 3,713,682 | 2,775,782 | 20,876,895 | 16,858,904 | 16,512,181 | 346,723 |
| | மொத்தம் | 40,631,783 | 25,663,038 | 22,033,521 | 3,629,517 | 22,092,433 | 17,980,262 | 17,546,329 | 433,933 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட ரூபா 215,538 தொகையான ஆதன வரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,437 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட பெறுமதியில் 20 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்குரிய விபரங்கள் வருமானப் பரிசோதகருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 199,333 தொகையான நிலுவை ஆதன வரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 127,752 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த அறவிடப்படாத பணம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரித் தொகையில் 64 சதவீதமாகும். | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இதற்காக விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

**2.2.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 142 கடைகளில் மாதாந்த வாடகை அறவிடும் போது ஊவா மாகாண பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபை நிதியத்திற்கு ரூபா 11,059,708 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். | கடை உரிமையாளர்களின் எதிர்ப்பினை கவனத்தில்கொண்டு விடயப்பொறுப்பு அமைசச்ரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட குறைவான வாடகையொன்று அறவிடப்படுவதை அறியத்தருகின்றோம். |

**2.2.4 நீர் கட்டண வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 7,424 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 97,525 தொகையான நிலுவை நீர்க்கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 மே 31 ஆந் திகதி வரையில் ரூபா 26,442 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 259,152 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,508,650 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருந்ததுடன் 2020 மே மாதம் வரையில் நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 1,602,100 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 64,470,000 தொகையான 45 செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் எதிர்பார்த்த நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

#### (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2008 திசெம்பர் 02 ஆம் திகதி முதல் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய கரமெட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றில் | சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு பொருத்தமான கழிவுகள் சேகரிக்கப்படாமையினாலும் ஊழியர்கள் போதியளவில் |

| | | |
|---|---|---|
| கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்பட்டிருந்ததுடன் உக்கும் கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசனை தயாரித்தல் ஆரம்பிக்கப்படவில்லை. | வேண்டும். | காணப்படாமையின் காரணமாகவும் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படுமென்பதை அறியத்தருகின்றோம். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நோக்கம் மற்றும் இலக்கை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பதவிகளுக்குரிய ஊழியர் மிகை 08 ஆகவும், 10 பதவிகளுக்குரிய ஊழியர் வெற்றிடம் 13 ஆகவும் காணப்பட்டன. | மிகையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளவேண்டியிருந்ததுடன் வெற்றிடங்களை நிரப்பவும் வேண்டும். | மாதாந்த பதவியணியினர் அறிக்கை மூலம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய பல்வேறு அளவுகளுடைய 58 காணிகளை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை | சபைக்குரிய காணிகளின் அளவீட்டைச் செய்து சட்ட | காணிகளில் ஒரு பகுதிக்காகஅளவிடல் கட்டளை பெறப்பட்டிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படாதிருந்ததுடன் 93 காணிகளின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | மிகுதிக் காணிகளின் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அவ்வப்போது வாசகர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 93,933 கிரயமான 459 நூலகப் புத்தகங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்குப் பதிலாக பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | 348 பத்தகங்கள் கையளிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | வாகன பயன்பாடு<br>--------------------------------<br>மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை தயாரிக்கப்படாமை<br>----------------------------------------- | | |
| | சபைக்குரிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 03 இற்கு 2019 சனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியின் போது 1967.7 மீட்டர் மணித்தியாலம் ஓடியிருந்ததுடன் 215 வேலைகள் நிறைவேற்றப்பட்டதாக நாளாந்த ஓட்டக்குறிப்புகளில் காண்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,575,574 தொகையான எரிபொருள் செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. எனினும் வேலைகளுக்குரிய மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தின் போது மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறைவேற்ற முடியாத இலக்குகள் | | |
| மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பொறுமதி ரூபா 12,150,000 தொகையான 75 வேலைகள் நிறைவேற்றப்படவில்லை. | பாதீட்டில் குறிப்பிடப்பட்ட வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்ட நிதி ஏற்பாடு கிடைக்கப்பெறாமையின் காரணமாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பேரிதயளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படடிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் தாபிக்கப்பட வேண்டும். | 2016 மார்ச் 24 ஆந் திகதி குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் 3 காலாண்டுக் கூட்டங்கள் உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகங்களில் நடாத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |